*Kalanjiyam International Journal of Tamil Studies* **ISSN: 2456-5148 (Online)**
*An international, peer-reviewed quarterly academic research journal* **www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p477-488** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# நீர்வழிப்படூஉம் நாவல் விவரிக்கும் சமூக மாற்றம்

Social Change Depicted in the Novel Neervazhipaduum

***ம. தர்ஷினி*,**
*முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), (BDU 2410632781024), தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி – 620017*
**M. Dharshini*,**
*Ph.D Research Scholar (Full Time) (BDU 2410632781024), Department of Tamil, Bishop Heber College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirapalli - 620017*
*E-Mail: dharshinimano2001@gmail.com | Mobile: 9566543958*
***முனைவர் டி. கிறிஸ்துமணி*,**
*உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி - 620017.*
**Dr. D. Christhumani*,**
*Assistant Professor, Department of Tamil, Bishop Heber College (Autonomous) (Affiliated to Bharathidasan University), Tiruchirapalli - 620017*
*E-Mail: christumanid@gmail.com | Mobile: 9443400029.*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 27-08-2026
**Published: 28-08-2026**
*Corresponding Author Email:
*dharshinimano2001@gmail.com*

**Abstract:** Among the works in Tamil novel literature that document the regional way of life, Neervazhipaduum occupies a significant place. Set against the rural background of Udaiyampalayam village in the Kongu region, the novel not only presents a record of regional life but also subtly documents, from a sociological perspective, the social transformations that occurred there as a result of changing times. During the period in which the land-based agrarian society was declining and capitalist society was emerging, the novel extensively portrays the changes that took place in the agriculture-based way of life of the villagers, the occupational transformation of the Kudinaavithars, and the process of urbanisation. The novel documents the gradual disappearance of caste-based traditional occupational arrangements and the tendency of villagers to seek new forms of employment. Extending the discussion with comparative reference to other regional Tamil novels and to sociological writings on caste-occupation mobility, this research article establishes, through a sociological approach, that these changes were not merely economic in nature but also brought about significant transformations in social relationships and values..

**Keywords:** *Devibharathi, Neervazhipaduum, Sociology of Literature, Social Change, Kongu Region, Caste-Occupation Mobility.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் நாவல் இலக்கியத்தில் வட்டார வாழ்வியலைப் பதிவு செய்துள்ள படைப்புகளில் 'நீர்வழிப்படூஉம்' நாவல் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. கொங்கு வட்டாரத்தின் உடையாம்பாளையம் கிராமப் பின்னணியில் எழுதப்பட்டுள்ள இந்நாவல், வெறும் வட்டாரப் பதிவாக மட்டுமின்றி, கால மாற்றத்தினால் அங்கு நிகழ்ந்துள்ள சமூகப் பரிணாமங்களையும் சமூகவியல் கோணத்தில் நுட்பமாகப் பதிவு செய்கிறது. நிலவுடைமைச் சமூகம் தேய்ந்து முதலாளித்துவச் சமூகம் தோன்றும் காலகட்டத்தில், கிராமத்து மக்களின் வேளாண்மை சார்ந்த வாழ்வியல் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், குடிநாவிதர்களின் தொழில் மாற்றம் மற்றும் நகரமயமாதல் ஆகியன நாவலில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. பாரம்பரியமாக நிலவிய சாதிய அடிப்படையிலான ஊழிய முறைகள் மறைந்து, கிராம மக்கள் புதிய தொழில்களை நாடிச் செல்லும் போக்கினை இந்நாவல் ஆவணப்படுத்துகிறது. இக்கட்டுரை, பிற கொங்கு வட்டார நாவல்களுடனான ஒப்பீட்டு நோக்கையும், சாதி-தொழில் இயக்கம் தொடர்பான சமூகவியல் எழுத்துகளையும் இணைத்து இந்நாவலின் ஆய்வுப் புலத்தை விரிவுபடுத்துகிறது. இம்மாற்றங்கள் வெறும் பொருளாதாரம் சார்ந்தது மட்டுமல்லாமல், சமூக உறவுகளிலும், மதிப்புகளிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை சமூகவியல் அணுகுமுறையின் அடிப்படையில் இந்த ஆய்வுக் கட்டுரை நிறுவுகிறது.

**திறவுச் சொற்கள்**

தேவிபாரதி, நீர்வழிப்படூஉம், இலக்கியச் சமூகவியல், சமூக மாற்றம், கொங்கு வட்டாரம், சாதி-தொழில் இயக்கம்

## 1. முன்னுரை

தமிழ் இலக்கிய வடிவங்களில் புதுமையானதும் தனித்துவமானதுமான இலக்கிய வடிவமாக நாவலைக் குறிப்பிட முடியும். இவ்விலக்கிய வடிவம் தமிழில் ஏனைய இலக்கிய வடிவங்களை காட்டிலும் பரந்த, பல்வேறுபட்ட மக்களின் வாழ்வியலை பதிவு செய்துள்ளது. தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் பல்வேறு நாவல்கள் சமூகத்தினை பிரதிபலிக்கும் சமூகவியல் நாவல்களாக படைக்கப்பட்டுள்ளன. சில நாவல்கள் சமூகவியல் கூறுகளை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. இந்நிலையில் கொங்கு வட்டார வாழ்வியலைக் களமாக கொண்டு, எழுத்தாளர் தேவிபாரதி அவர்களால் எழுதப்பட்டுள்ள நீர்வழிப்படூஉம் நாவல் ஒரு முழுமையான வட்டார நாவலாக கருதப்படுகிறது. இருப்பினும் இந்த நாவலில் வட்டார வாழ்வியல் மட்டுமின்றி இவ்வட்டாரத்தில் ஏற்பட்டுள்ள சில சமூக மாற்றங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நாவலில் சுட்டப்பட்டுள்ள சமூக

மாற்றங்களை சமூகவியல் அணுகுமுறையின் அடிப்படையில் இனங்காண்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## 2. ஆய்வு நோக்கமும் முறையியலும்

### *2.1. ஆய்வு நோக்கங்கள்*

இவ்வாய்வுக் கட்டுரை பின்வரும் நோக்கங்களை முன்வைத்து அமைகிறது: (i) நீர்வழிப்படூஉம் நாவலில் பதிவாகியுள்ள சமூக மாற்றங்களை சமூகவியல் அணுகுமுறையின் அடிப்படையில் அடையாளம் காணுதல்; (ii) கொங்கு வட்டாரத்தில் நிலவுடைமைச் சமூகத்திலிருந்து முதலாளித்துவச் சமூகத்திற்கு நிகழ்ந்த மாற்றத்தை வேளாண்மை, தொழில் என்ற இரு தளங்களில் ஆராய்தல்; (iii) குடிநாவிதர் சாதியினரின் தொழில் இடப்பெயர்வை சாதி-தொழில் இயக்கம் (caste-occupation mobility) என்ற சமூகவியல் கருத்தாக்கத்துடன் பொருத்திப் பார்த்தல்; (iv) இந்நாவலை பிற கொங்கு வட்டார நாவல்களுடன் ஒப்பிட்டு, வட்டார நாவல் மரபில் இதன் இடத்தை மதிப்பிடுதல்.

### *2.2. ஆய்வு முறையியல்*

இக்கட்டுரை பகுப்பாய்வு முறையையும் (analytical method) ஒப்பீட்டு முறையையும் (comparative method) இணைத்துக் கொண்டு அமைகிறது. நீர்வழிப்படூஉம் நாவலின் மூலப்பிரதியிலிருந்து சமூக மாற்றம் தொடர்பான பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சமூகவியல் திறனாய்வுக் கோட்பாட்டு வாசிப்புடன் ஒப்புநோக்கி விளக்கப்படுகின்றன. மேலும் நூலக ஆவணங்கள், இணைய வெளியீடுகள், ஆய்விதழ்களில் வெளியான கட்டுரைகள் ஆகியவை இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### *2.3. ஆய்வின் எல்லை*

இவ்வாய்வு நீர்வழிப்படூஉம் நாவலில் இடம்பெறும் தொழில் சார் சமூக மாற்றங்களை மட்டுமே முதன்மையாகக் கொண்டு அமைகிறது; நாவலின் கதைமாந்தர் உளவியல் பரிமாணங்கள், பாலியல் அரசியல் போன்ற பிற திறனாய்வு நோக்குகள் இவ்வாய்வின் எல்லைக்கு வெளியே வைக்கப்படுகின்றன.

## 3. இலக்கியமும் சமூகவியல் அணுகுமுறையும்: தத்துவார்த்தப் பின்னணி

### *3.1. சமூகவியல் அணுகுமுறை: வரையறை*

சமூகவியல் அணுகுமுறை என்பது இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவினை விளக்க முற்படும் ஓர் அணுகுமுறை ஆகும். ஒரு சமுதாயப் பின்புலத்தில் தோன்றுகின்ற இலக்கியம் அச்சமுதாயத்தை பிரதிபலிக்கிறது என்ற கருதுகோளினை மையமாகக் கொண்டது சமூகவியல் அணுகுமுறை. இத்திறனாய்வு முறையினைப் பற்றி க. பஞ்சாங்கம் அவர்கள் குறிப்பிடும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது:

> *இலக்கியத்தின் ஆதாரமாக விளங்கும் மொழியே ஒரு சமுதாயத்தின் படைப்புதான். கூடவே இலக்கியம் பயன்படுத்தும் யாப்பு, உத்திகள், சமிக்ஞைகள் முதலியனவும் சமுதாயத்திலிருந்து உருவானவைதான். மேலும் இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் இருக்கும் உறவினைச் "சமுதாயத்தைச் சொல்லில் வடித்தளிப்பதே இலக்கியம்" என்ற டி போனால்ட் (De Bonald) என்பாரின் புகழ்பெற்ற கூற்றின் மூலம் அறியலாம்.*[1]

க. பஞ்சாங்கம் அவர்கள் சமூகவியல் அணுகுமுறையானது குடும்பம், அரசு, நீதிமன்றம் போன்ற சமூக அலகுகளை இலக்கியத்துடன் இணைத்து விளக்குவதே சமூகவியல் அணுகுமுறை என விவரிக்கிறார்.

### *3.2. மேனாட்டு இலக்கியச் சமூகவியலாளர்களின் பார்வை*

இலக்கியச் சமூகவியல் (Sociology of Literature) என்ற துறை மேனாட்டு அறிவுத் தளத்திலும் விரிவாக வளர்ந்துள்ளது. இப்போலிட் டேய்ன் (Hippolyte Taine) இனம், சூழல், காலகட்டம் (race, milieu, moment) என்ற முக்கூறு மூலம் இலக்கியப் படைப்பை அதன் சமூகச் சூழலின் விளைபொருளாகவே அணுக வேண்டும் எனக் கருதினார். லூசியன் கோல்ட்மேன் (Lucien Goldmann) தமது தோற்றவியல் அமைப்பியல் (genetic structuralism) கோட்பாட்டின் வழி, ஒரு படைப்பு அதைப் படைத்த சமூகக் குழுவின் உலகப் பார்வையை வெளிப்படுத்துவதாக விளக்கினார். இயன் வாட் (Ian Watt) தமது 'நாவலின் தோற்றம்' என்ற ஆய்வில், ஆங்கில நாவல் வடிவம் பதினெட்டாம் நூற்றாண்டு நடுத்தர வர்க்கத்தின் பொருளாதார எழுச்சியுடன் இணைந்தே தோன்றியது எனக் காட்டுகிறார். ரேமண்ட் வில்லியம்ஸ் (Raymond Williams) பண்பாடு என்பதை ஒரு காலகட்ட சமூக அமைப்பின் 'உணர்வுக் கட்டமைப்பு' (structure of feeling) என விளக்கி, இலக்கியத்தை சமூக மாற்றத்தின் ஆவணமாகவே அணுக வேண்டும் என வலியுறுத்தினார். இக்கோட்பாட்டு மரபுகள் அனைத்தும் ஒன்றுபோல் வலியுறுத்துவது என்னவெனில், இலக்கியப் பிரதி ஒரு சுயேச்சையான அழகியல் பொருள் மட்டுமன்று;

அது உருவான சமூகச் சூழலின் அரசியல்-பொருளாதார அமைப்புகளையும், அச்சூழலில் நிகழும் மாற்றங்களையும் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதே.

### *3.3. தமிழ்த் திறனாய்வாளர்களின் பார்வை*

சமூகவியல் திறனாய்வானது குறிப்பிட்ட இலக்கிய வகை அல்லது இலக்கியப் பிரதி தோன்றிய பின்புலத்தினை ஆராய்கிறது. குறிப்பிட்ட இலக்கியப் பிரதியில் விவரிக்கப்பட்டுள்ள சமூகச் சூழல், சமூக மதிப்புகள், சமூக மாற்றங்கள் ஆகியனவற்றையும் ஆராய்கிறது.

> *திருமணம், தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம், சமூக நியதிகள் அல்லது எழுதப்படாத சட்டங்களும் மரபுகளும், சாதி முதலியவை சமுதாய நிறுவனங்களாகும். இலக்கியத்தில் இவை எவ்வெவ்வாறு இடம் பெற்றுள்ளன என்று கண்டறிவது சமுதாயவியல் அணுகுமுறையில் மிகவும் முக்கியமானதாக உள்ளது.*[2]

என சமூகவியல் அணுகுமுறை பற்றி தி. சு. நடராசன் அவர்களின் கருத்தின் மூலம் இதனை விளங்கிக் கொள்ளலாம்.

## 4. சமூக மாற்றம்: கருத்தாக்கமும் இலக்கியப் பதிவும்

### *4.1. சமூக மாற்றம் பற்றிய சமூகவியல் விளக்கங்கள்*

சமூகவியல் அணுகுமுறையில் அமையும் பிரிவுகளை பின்வருமாறு வகைப்படுத்துவர். இதில் சமூக மாற்றம் அல்லது சமுதாய மாற்றம் என்ற ஒன்றையும் குறிப்பிடுவர். ஆகஸ்ட் காம்ட் (Auguste Comte) தொடங்கி கார்ல் மார்க்ஸ் (Karl Marx), மாக்ஸ் வெபர் (Max Weber) வரையிலான மேனாட்டு சமூகவியலாளர்கள் சமூக மாற்றத்தை பொருளாதார உற்பத்தி முறையின் மாற்றத்துடன் இணைத்தே விளக்கியுள்ளனர். இந்திய சூழலில் எம். என். சீனிவாஸ் (M. N. Srinivas) முன்வைத்த சமஸ்கிருதமயமாக்கல் (Sanskritisation), மேனாட்டு மயமாக்கல் (Westernisation) என்ற கருத்தாக்கங்கள் சாதி அடுக்குகளுக்கு இடையேயான நிலைமாற்றத்தை விளக்குவனவாக அமைகின்றன. இக்கருத்தாக்கங்களின் வெளிச்சத்தில் நோக்கும்போது, நிலவுடைமைச் சமூகம் தேய்ந்து முதலாளித்துவப் பொருளாதாரம் தோன்றும் காலகட்டத்தில் சாதி அடிப்படையிலான தொழில் அமைப்புகளும் அவற்றிற்கேற்ப மாறுவது ஒரு பொதுவான சமூகவியல் நியதியாக அமைகிறது. சமூக மாற்றம் பற்றி தி. சு. நடராசன் அவர்கள் குறிப்பிடும் கருத்து பின்வருமாறு:

> *கதையை அல்லது நிகழ்ச்சியை நகர்த்திக்கொண்டு செல்லும்போதே அதன் உடன்விளைவாக இது தோன்றலாம்; அல்லது இறுதியில், எச்சப் பொருளாகவோ*

*குறிப்புப் பொருளாகவோ வெளிப்பட்டும் தோன்றலாம். படைப்பினுடைய தன்மையைச் சார்ந்தது இது. குறிப்பிட்ட படைப்பு வெளிப்படுத்தும் சமுதாய மாற்றம் அந்தப் படைப்பினுடைய உள்ளமைப்பிலும் அக்காலச் சூழமைவிலும் வைத்து உரசிப் பார்ப்பதற்குரியது.*[3]

### *4.2. இலக்கியத்தில் சமூக மாற்றத்தின் பதிவு*

இவ்வாறு ஓர் இலக்கியப் படைப்பில் விவரிக்கப்படும் சமூக மாற்றம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்நிலையில் இலக்கிய திறனாய்வில் சமூகவியல் அணுகுமுறை என்ற நூலில் துரை. சீனிச்சாமி அவர்கள் கல்கியின் கதைகளில் சமூக மாற்றம் என்ற கட்டுரையின் வழியாக சமூக மாற்றத்தினை மிக விரிவாக விளக்கியுள்ளார். இம்முறையினை முன்னோடியாக கொண்டு நீர்வழிப்படூஉம் நாவலில் குறிப்பிடப்பட்டுள்ள சமூகவியல் மாற்றங்களை விளங்கி கொள்ள நாவலின் கதைக்களத்தினையும் அது படைக்கப்பட்ட ஆசிரியரையும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

## 5. தேவிபாரதியும் நீர்வழிப்படூஉம் நாவலும்

### *5.1. ஆசிரியர் அறிமுகம்*

தேவிபாரதி என்ற புனைபெயரில் எழுதி வரும் இவரது இயற்பெயர் ராஜசேகரன். டிசம்பர் 30, 1957 அன்று பிறந்த இவர் ஈரோடு மாவட்டம் சென்னிமலை பகுதியில் தமது இளமைக் காலத்தைக் கழித்தவர். இடதுசாரிப் பார்வையில் எழுதத் தொடங்கிய இவர், பின்னாளில் காந்தியப் பார்வையை நோக்கி நகர்ந்ததாக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். 1980-ஆம் ஆண்டிலிருந்தே சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் வழியாக இலக்கியப் பங்களிப்பைத் தொடங்கிய தேவிபாரதி, 2011-ஆம் ஆண்டில்தான் தமது முதல் நாவலான 'நிழலின் தனிமை'யை வெளியிட்டார். தொடர்ந்து 'நடராஜ் மகராஜ்' (2017), 'நீர்வழிப்படூஉம்' (2020), 'நொய்யல்' (2022) ஆகிய நாவல்களையும் படைத்துள்ளார். உளவியல் நெருக்கடிகளை சமூகப் பின்னணியில் நிறுவி ஆராயும் படைப்பாளி என விமர்சகர்களால் சிறப்பிக்கப்படும் தேவிபாரதி, கொங்கு வட்டார வாழ்வியலை மிக நுட்பமாகப் பதிவு செய்பவராகவும் அறியப்படுகிறார்.

### *5.2. நாவலின் அறிமுகமும் கதைக்களமும்*

காரு மாமா என்பவரின் இறப்புச் செய்தி கேட்டு அவரது ஊருக்கு தனது அம்மாவுடன் ராஜசேகரன் செல்வதிலிருந்து நீர்வழிப்படூஉம் நாவலின் கதை தொடங்குகிறது. காரு மாமாவின் மனைவியான ராசம்மா அத்தை தாயக்கட்டைகளை உருட்டுவதோடு இந்நாவலின் கதை முடிவடைகிறது. காரு மாமா

மற்றும் ராசம்மா அத்தை ஆகியோருக்கு இடையேயான உறவுச் சிக்கல் தான் இந்நாவலின் மையம். இருப்பினும் நாவலின் பின்னணி வட்டார வாழ்வியலுடன் மிகவும் விரிவாக எழுதப்பட்டுள்ளது. கொங்கு நாட்டில் உள்ள உடையாம்பாளையம் எனும் புஞ்சை கிராமத்தின் வாழ்வியலை விவரிக்கிறது இந்நாவல். மேலும் கொங்கு பகுதியில் நிலை கொண்டுள்ள குடிநாவிதர் எனும் சாதிய வழக்கத்தினை விரிவாகவும் நுட்பமாகவும் பதிவு செய்கிறது. இப்பதிவின் காரணமாக தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் நீர்வழிப்படூஉம் நாவல் தனித்துவமானதாக அமைகிறது.

## 6. கொங்கு வட்டாரமும் அதன் சாதிய அமைப்பும்

### *6.1. கொங்கு நாட்டின் பின்னணி*

தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கொங்கு மண்டலம் வரலாற்று ரீதியாக சேரர்களால் ஆளப்பட்ட பகுதியாகும். கிழக்கில் தொண்டை நாடும், தென்கிழக்கில் சோழ நாடும், தெற்கே பாண்டிய நாடும் சூழ்ந்துள்ள இப்பகுதி, பண்டைய காலம் முதல் இடைக்காலம் வரை இருபத்து நான்கு உள்நாடுகளாகப் பிரிக்கப்பட்டு, தனித்துவமான உள்ளூர் ஆட்சி முறையையும் பண்பாட்டு அமைப்பையும் கொண்டிருந்தது. இக்கொங்கு வட்டார அமைப்பே இன்றளவும் ஈரோடு, திருப்பூர், கரூர், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களின் சமூகக் கட்டமைப்பிலும், பேச்சு வழக்கிலும், தொழில் அமைப்பிலும் தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தி வருகிறது.

### *6.2. கொங்கு வேளாளக் கவுண்டரும் குடிநாவிதர் முறையும்*

கொங்கு வேளாளக் கவுண்டர் என்ற சாதியினருக்கு குடி ஊழியம் செய்யும் நாவிதர் சாதியினைச் சேர்ந்தவர்கள் குடிநாவிதர் என்று அழைக்கப்படுகின்றனர். தமிழகம் முழுவதும் பொதுவாக அம்பட்டன் என அழைக்கப்படும் நாவிதர் சமூகத்தினர், பாரம்பரியமாக முடி திருத்தும் தொழிலையும், கிராமப்புற மருத்துவம் மற்றும் மகப்பேறு தொடர்பான சேவைகளையும் ஆற்றி வந்தவர்கள். குறிப்பிட்ட உயர் சாதியினருக்கு பரம்பரை பரம்பரையாக இலவசமாகவோ, குறைந்த கூலிக்கோ ஊழியம் செய்ய வேண்டிய கடப்பாடு கொண்ட 'குடி ஊழிய' முறை இச்சாதியினருக்கு இருந்து வந்துள்ளது. உடையாம்பாளையத்தில் வாழ்ந்து வருகின்ற குடிநாவிதர்களின் வாழ்வியலை பல்வேறு கதை மாந்தர்களின் வழியாக விரிவாக பதிவு செய்துள்ளது நீர்வழிப்படூஉம் நாவல். இவ்வகையில் இனவரைவியல் அடிப்படையிலும் வட்டார வாழ்வியலை விவரிப்பதிலும் இந்நாவல் மிக நேர்த்தியாக கட்டமைக்கப்பட்டுள்ளது. வட்டார நாவலாக இருப்பினும் கதையின் போக்கில் உடையாம்பாளையம் கிராமத்தில் நிகழும் பல்வேறு சமூக மாற்றங்களும் இந்நாவலில் சுட்டப்பட்டுள்ளது.

இந்திய சமூக அமைப்பில் குறிப்பிட்ட சாதியினர் குறிப்பிட்ட தொழில்களையே செய்ய வேண்டும் என்ற கட்டாயம் நீண்ட காலமாக நிலவி வந்தது; அத்தொழில்கள் பெரும்பாலும் இழிவானதாகவும் கருதப்பட்டன. கடந்த நாற்பது ஐம்பது ஆண்டுகளில் உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட முதலாளித்துவப் பொருளாதார மாற்றங்கள், நகரமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் நீண்டகால சமூக நீதிப் போராட்டங்கள் ஆகியவை காரணமாக, நாவிதர் போன்ற சாதியினரின் பாரம்பரிய ஊழிய முறை படிப்படியாகச் சிதைந்து, அவர்கள் சுயதொழில் அல்லது கூலித் தொழிலாளர்களாக நகர்ப்புறங்களில் இணையும் போக்கு தமிழ்நாடு முழுவதும் காணப்பட்டது. நீர்வழிப்படூஉம் நாவல் இப்பரந்த சமூகவியல் போக்கினை உடையாம்பாளையம் என்ற ஒரு குறிப்பிட்ட கிராமத்தின் நுண்தள அனுபவமாக பதிவு செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## 7. நாவலில் பதிவாகியுள்ள சமூக மாற்றங்கள்

### *7.1. வேளாண் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றம்*

உடையாம்பாளையம் கிராம மக்கள் வேளாண்மை தொழிலை முதன்மையாகக் கொண்டவர்கள். நில உடைமைச் சமூகம் தேய்ந்து முதலாளித்துவச் சமூகம் தோன்றும் காலகட்டம் நாவலில் சுட்டப்படுகிறது. இது தமிழ்நாட்டுக் கிராமங்கள் மரபான வேளாண்மைத் தொழிலினை கைவிட்டு புதிய தொழில்களை நோக்கி நகர்ந்த காலகட்டம் என்று குறிப்பிடலாம். சமூக மாற்றத்திற்கு இம்மாற்றம் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக கூறலாம்.

> *சிறிதளவு நிலத்தில் நெல்லும் பயிரிட்டு வாழ்ந்து வந்த ஆம்பராந்துக் கரை விவசாயிகளில் பலர் செம்மறி ஆடு வளர்ப்பில் தஞ்சமடைந்தார்கள். சிலர் கோழிப்பண்ணை வைத்தார்கள். முருங்கை பயிரிட்டார்கள், நான்கைந்து தென்னை மரங்களை நட்டு வளர்த்தார்கள். விளைந்ததை எடுத்துக்கொண்டு மூலனூர், வெள்ளக்கோவில், அரவக்குறிச்சி எனச் சந்தைசந்தையாய் அலைந்தார்கள்.*[4]

என உடையாம்பாளையம் விவசாயிகளின் வேளாண்மை முறையையும் கால்நடை வளர்ப்பு முறையையும் கால மாற்றத்திற்கு ஏற்ப மாற்றமடைந்து வந்துள்ளதை இந்நாவல் பதிவு செய்கிறது.

முருங்கை, தென்னை, கருவேப்பிலை, எலுமிச்சை, தக்காளி என தோட்டப்பயிர் வேளாண்மைக்கு கிராம விவசாயிகள் மாறியது சந்தை பொருளாதாரத்தினை நோக்கிய வேளாண்மை முறை எனக் குறிப்பிடலாம். புதிய தொழில்களை முன்னிட்டு நகரங்களை நோக்கிச் சென்ற கிராமவாசிகளையும் தேவிபாரதி பதிவு செய்துள்ளார். சிலர் புதிய விற்பனைக் கடைகளை தொடங்கியதையும் சிலர் சாயத் தொழிற்சாலைகளைத் தொடங்கியதையும் நீர்வழிப்படூஉம் நாவலில் வழி அறிய முடிகிறது.

*அலைந்து திரிவதில் விருப்பமற்றவர்கள் இருந்த துண்டு துக்காணி நிலங்களை விற்றுக் காசாக்கிக் கொண்டு வெள்ளக்கோவில், மூலனூர், தாராபுரம் எனக் கைக்கெட்டும் தொலைவிலிருந்த சிறிய நகரங்களுக்குப் போய்ப் பாத்திரக்கடைகளும் சாப்பாட்டுக்கடைகளும் வைத்தார்கள், கொஞ்சம் எட்டி நடந்து திருப்பூருக்கும் ஈரோட்டுக்கும் போய் சாயப்பட்றைகளில் தஞ்சமடைந்தவர்களும் உண்டு.*[5]

### *7.2. குடிநாவிதர்களின் தொழில் இடப்பெயர்வும் நகரமயமாதலும்*

குடிநாசுவம் எனும் ஊழிய முறையின் அடிப்படையில் கிராம வேளாண்மையுடன் பிணைக்கப்பட்டிருந்த உடையாம்பாளையம் கிராமத்தின் நாவிதர்களும் சமூக மாற்றத்தின் காரணமாக நகரத்தினை நோக்கி இடம்பெயர்ந்தனர். காலங்காலமாக அவர்கள் பண்ணையார்களுக்கு செய்து வந்த ஊழியங்களை கைவிட்டு, நகரத்தில் முடி திருத்தும் நிலையங்களில் வேலைக்குச் சேர்ந்ததை நாவலின் வழி அறிய முடிகிறது.

*தன் வயதொத்தவர்களில் சிலர் ஈரோடு, திருப்பூர், கரூர் என இடம்பெயர்ந்து பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டதைப் பார்த்த அம்பிகாபதியண்ணன் சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு ஈரோட்டுக்குப் போய் கே.பி.ஆரின் சிபாரிசைப் பெற்று கருங்கல்பாளையத்தில் இருந்த சிகை அலங்கார நிலையம் ஒன்றில் சிறிது காலம் மயிர்கூட்டிக் கொண்டிருந்திருக்கிறார்.*[6]

முத்தையன்வலசு பெரியப்பாவின் மகன் அம்பிகாபதி. இவர் கிராமத்தினை விட்டு கருங்கல்பாளையத்திற்கு சென்று முடி திருத்தும் கடையில் ஒன்று வேலை பார்த்ததை இதற்கு எடுத்துக்காட்டாக கூற முடியும். இதே போல அம்பிகாபதியே தனியே சொந்தமாக முடி திருத்தும் நிலையம் வைத்துக் கொண்டதையும் இந்நாவலில் காண முடிகிறது.

*உறவினர் ஒருவரின் ஒத்துழைப்புடன் பூந்துறைக்குப் போய் இரண்டு நாற்காலிகளுடனும் முகம் பார்க்கும் கண்ணாடிகளுடனும் டிரான்சிஸ்டருடனும் சிகை அலங்கார நிலையம் ஒன்றை வைத்தார், நிலைப்படியில் திரைச்சீலையொன்றைத் தொங்கவிட்டு வாடிக்கையாளர்கள் உட்கார்வதற்கான மரப் பெஞ்ச் ஒன்றையும் வாங்கிப் போட்டதுடன் அவர்களது பொது அறிவை வளர்த்துக்கொள்வதற்காக நாள் தவறாமல் தினத்தந்தியை வரவழைத்துத் தந்தார் அம்பிகாபதியண்ணன்.*[7]

சமூக மாற்றத்தின் காரணமாக வேளாளக் கவுண்டர் ஒருவர் முடி திருத்தும் நிலையம் நடத்தி வந்ததையும் நீர்வழிப்படூஉம் நாவல் சுட்டிக்காட்டுகிறது.

*அந்தக் காசுக்காகத்தான் கவுண்டர் வெட்கம், மானம் பார்க்காமல் அந்தக்கவுண்டர் நாவிதனாக மாறிவிட்டானா எனக் கேட்டார்களாம். சலூன் வைத்துப் பிழைத்தபோதும் கவுண்டர், கவுண்டராகவே இருந்தார், சலூனில் வேலை செய்த நாவிதர்களை நாவிதர்களாகவே நடத்தினார்.*[8]

### *7.3. சாதிய ஊழிய முறையின் சிதைவும் புதிய பொருளாதார உறவுகளும்*

இவ்வாறு நாவலில் உடையாம்பாளையம் கிராமத்தில் நிகழ்ந்த தொழில் மாற்றம் விரிவாகச் சுட்டப்படுகிறது. இம்மாற்றம் வெறும் தொழில் மாற்றமாக மட்டுமில்லாமல் கிராம மக்களை நகரங்களை நோக்கி பெயரும் மாற்றமாகவும் அமைந்துள்ளது. வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட சிறு விவசாயிகள் சிறு சிறு விற்பனைக் கடைகளை நகரங்களில் அமைத்துக் கொண்டதும், பண்ணையார்கள் சாயப்பட்டறை போன்ற ஆலைத் தொழில்களை மேற்கொண்டு முதலாளிகள் ஆனதும் நாவலின் கதைப்போக்கில் விவரிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி கிராமத்தின் ஊழியக் குடிகள், குறிப்பாக நாவிதர்கள், குடி ஊழிய முறையினைக் கைவிட்டு நகரங்களில் தொழிலாளர்களாக மாறி விட்டதையும் நாவலின் வழி அறிய முடிகிறது. கவுண்டர் ஒருவர் சாலூன் தொழிலில் முதலாளியாக மாறியும், தமது சாதிய அந்தஸ்தினை இழக்காமல் இருந்த நிகழ்வு, பொருளாதார உறவு மாறினாலும் சாதிய அடையாள உணர்வு உடனடியாக மறைந்துவிடாது என்பதையும் நுட்பமாகக் காட்டுகிறது.

### 8. ஒப்பீட்டாய்வு: கொங்கு வட்டார நாவல் மரபில் நீர்வழிப்படூஉம்

சமகாலத் தமிழ் நாவல் மரபில் கொங்கு வட்டார வாழ்வியலை பதிவு செய்யும் பல படைப்புகள் வெளிவந்துள்ளன. பெருமாள்முருகனின் 'மாதொருபாகன்', 'கங்கணம்' ஆகிய நாவல்கள் கொங்கு வட்டாரத்தின் பண்பாட்டுப் பிரதேசத்தை சித்தரிக்கின்றன. கீரனூர் ஜாகீர்ராஜாவின் 'துருக்கித்தொப்பி', 'கறுத்தலெப்பை' ஆகிய நாவல்கள் கொங்கு வட்டார அடித்தள முஸ்லீம் மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்கின்றன. இப்படைப்புகளுடன் ஒப்பிடும்போது, தேவிபாரதியின் நீர்வழிப்படூஉம் நாவல் தனித்துவம் பெறுவது, அது சாதிய அடுக்குகளுக்கு இடையேயான பொருளாதார உறவை - அதாவது கவுண்டர் (நிலவுடமையாளர்) - குடிநாவிதர் (ஊழியக் குடி) உறவை - காலப்போக்கில் நிகழும் மாற்றத்தின் வழியாக மிக நுட்பமாகப் பதிவு செய்திருப்பதிலேயே ஆகும். புலம்பெயர்வு மற்றும் அடையாள மாற்றம் தொடர்பான சமகால தமிழ் நாவல் ஆய்வுகள் சுட்டிக்காட்டுவது போல, இடப்பெயர்வு என்பது வெறும் பொருளியல் நடவடிக்கை மட்டுமன்று; அது பண்பாட்டு அடையாளத்தையும், சமூக நிலையையும் மறுவரையறை செய்யும் ஒரு செயல்முறையாகும். நீர்வழிப்படூஉம் நாவலில் அம்பிகாபதி கிராமத்தை விட்டு நகரத்திற்குச் சென்று

தனது சொந்தத் தொழிலை நிறுவும் நிகழ்வு, இத்தகைய அடையாள மறுவரையறைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.

### 9. முடிவுரை

கொங்கு கவுண்டர்களுக்கும் குடிநாவிதர்களுக்குமான சமூக உறவு நிலவுடைமைச் சமூகம் நிலைபெற்றிருந்த காலத்தில் வலுவாக அமைந்திருந்தது. பின்னாளில், விவசாயத்தினை விட்டு தொழில்களை நோக்கி நகரும் காலம் தோன்றும் போது, இவ்வுறவில் மாற்றம் ஏற்படுகிறது. கவுண்டர்கள் முதலாளிகளாகவும் நாவிதர்கள் தொழிலாளர்களாகவும் மாறுகின்றனர். இது வெறும் தொழில் மாற்றமாக மட்டுமில்லாமல் சமூக மாற்றமாக அமைந்துள்ளதை இக்கட்டுரை உறுதி செய்கிறது. அதாவது, நிலவுடைமைச் சமூகம் வீழும் வரை கொங்கு கவுண்டர்களுக்கும் குடிநாவிதர்களுக்கும் இடையே நிலவிவந்த சமூக உறவு முற்றிலும் மாற்றம் பெறுகிறது. இம்மாற்றம் சமூக நிறுவனமான கிராமத்திலும் சமூக மதிப்புகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதை நாவலின் வழி அறிய முடிகிறது. பிற கொங்கு வட்டார நாவல்களுடன் ஒப்பிடும்போதும், சாதி-தொழில் இயக்கம் தொடர்பான பரந்த சமூகவியல் ஆய்வுகளுடன் பொருத்திப் பார்க்கும்போதும், நீர்வழிப்படூஉம் நாவலில் பதிவாகியுள்ள மாற்றங்கள் தமிழ்நாட்டுக் கிராமப்புறங்களில் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் பரவலாக நிகழ்ந்த சாதிய-பொருளாதார மறுகட்டமைப்பின் ஒரு நுண் மாதிரியாகவே விளங்குகிறது எனலாம். எனவே, தேவிபாரதி எழுதியுள்ள நீர்வழிப்படூஉம் நாவலானது வெறும் வட்டார வாழ்வியலை மட்டும் முன் வைக்காமல் கொங்கு வட்டாரத்தில் நிகழ்ந்த சமூக மாற்றத்தினை கதைப் போக்கில் விவரித்துச் செல்கிறது என்பதை அறிய முடிகிறது.

### 10. துணைநூற்பட்டியல் (Works Cited — MLA 9th Edition)

#### மேற்கோள் குறிப்புகள் (Citation Notes)

1. பஞ்சாங்கம், க. இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப. 45.
2. நடராசன், தி. சு. திறனாய்வுக் கலை, ப. 62.
3. நடராசன், தி. சு. திறனாய்வுக் கலை, ப. 65.
4. தேவிபாரதி. நீர்வழிப்படூஉம், ப. 34.
5. தேவிபாரதி. நீர்வழிப்படூஉம், ப. 36.
6. தேவிபாரதி. நீர்வழிப்படூஉம், ப. 58.
7. தேவிபாரதி. நீர்வழிப்படூஉம், ப. 61.
8. தேவிபாரதி. நீர்வழிப்படூஉம், ப. 73.

## Works Cited

[1]. "அண்மைக் காலத் தமிழ் நாவல்களின் போக்குகள் - சில மதிப்பீடுகள்." *கீற்று* (Keetru), 30 Mar. 2015, keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-feb2015/28145-2015-03-30-07-37-57.

[2]. "கொங்கு நாடு." விக்கிப்பீடியா, Wikimedia Foundation, 7 July 2026, ta.wikipedia.org/wiki/கொங்கு_நாடு.

[3]. "சாதியச் சமூகம்: குடிப்பிள்ளை (சாதிப்பிள்ளை)." *கீற்று* (Keetru), 15 Dec. 2017, keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-dec17/34302-2017-12-15-06-11-35.

[4]. தேவிபாரதி. நீர்வழிப்படூஉம். தன்னறம் நூல்வெளி, 2022.

[5]. "தேவிபாரதி." தமிழ் விக்கிப்பீடியா, Wikimedia Foundation, 5 Feb. 2026, ta.wikipedia.org/wiki/தேவிபாரதி.

[6]. "தேவிபாரதி." தமிழ் விக்கி (Tamil Wiki), 17 Nov. 2024, tamil.wiki/wiki/தேவிபாரதி.

[7]. நடராசன், தி. சு. திறனாய்வுக் கலை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2022.

[8]. "நவீன தமிழ் நாவல்களில் குடியேற்ற அனுபவங்கள்: அடையாள உருவாக்கம், சார்ந்திருத்தல் மற்றும் கலாச்சார மாற்றங்களின் பேச்சுவழக்குகள்." International Journal of Indian Language Research Studies (IJILRS), 26 Sept. 2025, eduresearchjournal.com/index.php/ijilrs/article/view/245.

[9]. "நாவிதர், வண்ணார் சாதிகளின் வாழ்வியலில் மாற்றம் நிகழ்ந்தது எப்படி?" ஹூரான் (Hooraan), 15 May 2026, hooraan.blogspot.com/2026/05/blog-post_426.html.

[10]. "நாவிதர்." விக்கிப்பீடியா, Wikimedia Foundation, 3 July 2026, ta.wikipedia.org/wiki/நாவிதர்.

[11]. பஞ்சாங்கம், க. இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும். அன்னம் வெளியீடு, 2011.

[12]. Goldmann, Lucien. Towards a Sociology of the Novel. Translated by Alan Sheridan, Tavistock Publications, 1975.

[13]. Srinivas, M. N. Social Change in Modern India. University of California Press, 1966.

[14]. Watt, Ian. The Rise of the Novel: Studies in Defoe, Richardson and Fielding. University of California Press, 1957.

[15]. Williams, Raymond. The Long Revolution. Chatto & Windus, 1961.

**ஆசிரியர் பிரகடனம் — நலன் முரண்பாடு அறிக்கை**

இக்கட்டுரையின் ஆசிரியர்களான ம. தர்ஷினி மற்றும் முனைவர் டி. கிறிஸ்துமணி ஆகியோர், இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கம், தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது வெளியீடு தொடர்பாக எவ்வித நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட நலன் முரண்பாடும் (Conflict of Interest) இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றனர். இக்கட்டுரை எந்தவொரு நிறுவனத்திடமிருந்தும் அல்லது நபரிடமிருந்தும் நிதி உதவி பெறாமல், முழுக்க முழுக்க கல்வி நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட சுயேச்சையான ஆய்வாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூல மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளும் முறையாக ஆசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்டு, துணைநூற்பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.